மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை. இந்த பேருந்து தர்மபுரி வரை நீடிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு நெடுந்தூர பஸ் இருந்ததை, தர்மபுரி வரை மாற்றப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் பெங்களூரில் இருந்து சென்னைக்கு தனியார் பேருந்துகள் இரவு பத்து மணிக்குமேல் 4 பேருந்து வண்டிகள் வருகிறது. அரசு வருமானத்தைப் பெருக்கவும், பொதுமக்கள் பயணத்திலே இருக்கிற தொல்லைகளை நீக்கவும், குறைந்தது கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு ஒரு புதிய பஸ் விட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தர்மபுரிக்கு மாற்றப்படவில்லை. நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மற்ற யோசனைகள் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகின்ற குற்றாலத்திற்கு, சென்னையிலே இருந்து நேரடியாக பஸ் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது பற்றி பரிசீலனை அரசின் கவனத்தில் இருந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைப் பகுதிகளில் சாலைகள்.

* 299. **வினா**—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் உள்ள கல்லேரி—வாணாபுரம் சாலையை அபிவிருத்தி செய்ய அளவுகள் செய்யப்பட்டு சுமார் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் வேலை நடைபெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், வேலை நடைபெற எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) மற்றும் (ஆ) : கல்லேரி—வாணபுரம் சாலை அமைப்பு வேலை, இதுவரை அரசினரால் எந்த பட்டியலிலும் சேர்க்கப் படவோ அல்லது ஒப்பளிக்கப்படவோ இல்லை. சர்க்கரை இயக்குநர், ரூ. 17 இலட்சம் செலவில் வாணபுரம் முதல் வெரையூர் வரை சாலை அமைப்பு வேலைக்குப் பிரேரணை அனுப்பினர். புதிய வேலைகளுக்கு நிதி இல்லாமையால் இவ்வேலை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி சாலையின் ''வாணபுரம் முதல் தலையாம்பள்ளம் கி.மீ. 0/0—5/5'' பகுதியை 1977–78-ம் ஆண்டில் மத்திய அரசு உதவிபெறும் இணைப்புச் சாலைத் திட்டத்தின் கீழ் போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத்தலைவர் அவர்களே, இப்படி ஆலை நிதியில் இருந்து, தென்னார்க்காடு மாவட்டத்தில் எவ்வளவு தொகையில் சாலைகள் அமைக்கப்பட்டன ? வடார்க்காடு மாவட்டத்தில் எவ்வளவு தொகையில் சாலைகள் அமைக்கப்பட்டன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வடார்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களுக்கு எவ்வளவு செலவுகள் என்று இல்லை. ஆனல் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 53 லட்சம் ரூபாய்க்கு 1972-லே இருந்து 1975 வரையில் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதிநிலை அறிக்கையிலாவது வடார்க்காடு மாவட்டத்திற்குச் சாலைகளை அமைக்க மதிப்பீடுகள் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றித் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* 300. வின—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையிலிருந்து இதுவரை வசூலிக்கப்பட்டுள்ள கேன் செஸ் வரியின் மொத்த தொகை எவ்வளவு ?